உ

# 31ம் நாள் நினைவஞ்சலி மலர்



அமரர். திருமதி.

## கனகம்மா கணபதிப்பிள்ளை

அவர்களின்


# 31ம் நாள் நினைவஞ்சலி மலர்


11-12-2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் குல

விளக்காய் இன்பத்திலும்

துன்பத்திலும் உயிராய் ஒளியாய்

எம்மோடு கலந்து இல்லறத்தை

நல்லறமாக்கி இறைபணியாற்றி

அன்புடனும் பண்புடனும் வாழ

வழிகாட்டி இறையோடு கலந்து

விட்ட உத்தமியே உங்கள்



திருபாதங்களில்



சமர்ப்பிக்கின்றோம் இந்

நினைவஞ்சலி மலரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்.
# திருமதி. கனகம்மா கணபதிப்பிள்ளை

தவப்பேறு:
23-06-1938

சிவப்பேறு:
11-11-2021

### திதி வெண்பா


பிலவ வருடம் ஆனதோர் ஐப்பசி திங்கள் (11-11-2021 வியாழன்)
வளர்பிறை அட்டமி திதிதனக் கொண்டு
பூவுலகில் வாழ்ந்த கனகம்மா பூவுலகை விட்டு
புண்ணிய உலகம் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
திருச்சிற்றம்பலம்







## விநாயகர் துதி

முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகந்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின் தாள் சரண்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவஸ்ஸுவஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்க்கோ தேவஸ்ய தீமஹி
தியோயோன ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அத்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைத்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

## திருவாகம்

யானே பொய் என்நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
யானே அருளாய் அடியேன்
உனைவந்து உறுமாறே.

## திருவிசைப்பா

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிறைந்த தலத்துப்
புலித்தொல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் காண
விகிர்தன் ஆடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொழி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழ விடையார்க்கு வழி வழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
புழவடியாரோடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருபுராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்

## திருபுகழ்

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மண வாளப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்த்து**

ஆறிரு தடந்தோள் வாழ்க
　　ஆறுமுகம் வாழ்க வெற்பை
கூறு செய் தணிவேல் வாழ்க
　　குக்குடம் வாழ்க செவ்வேல்
ஏறிய மஞ்ஞை வாழ்க
　　ஆணை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
　　வாழ்க சீர் அடியாரெல்லாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். கனகம்மா கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு

வங்கக்கடலின் இரத்தின தூபமே இலங்கைத் திருநாடு. இதன் கிழக்கே தென்கைலை என்று போற்றப்படும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கோணநாதர் உறைகொள் திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ளது. இதன் ஓரமாய் பரந்து விரிந்து பெருக்கமாய்த் தோன்றும் கடலின் மறுபக்கக் கரையில் காடுகளும் களத்து மேடுகளும் நீர் வளம் வற்றாத மகாவலியான் பாயும் ஓடைகளும் இயற்கை அழகும் எழில்மிகு காட்சிகளும் இன்முகத்தோடு அனைவரையும் வரவேற்று, விருந்தோம்பும் உணர்வுமிகு மாந்தர் அணி செய்யும் ஊர்தான் மூதூரின் பாலத்தடிச்சேனைக் கிராமம் ஆகும்.

இவ்வாறு இங்கு களத்தோடு நெல் குவியும் காராளர் பதியிலே சீரும் சிறப்புமாக வாழ்ந்த அழகுதுரை லெட்சணப்பிள்ளை தம்பதிகளுக்கு மூத்த மகளாக 1938ஆம் ஆண்டு ஆனிமாதம் 23ந் திகதி அவதரித்தவர் தான் கனகம்மா அவர்கள். சின்னப்பிள்ளை அமரர். அமராவதி இராசபாக்கியம், சச்சிதானந்தம் (லண்டன்), நவமணிதேவி, திலகராணி, யோகராணி ஆகியோருக்கு மூத்த சகோதரியாகப் பிறந்தவர்.

சிறுவயதிலேயே கல்வியில் நாட்டமும், திறமையும் இளமைத்துடிப்புடனும் விளங்கிய இவர் தனது ஆரம்பக்கல்வியை தி/மூ பாலத்தடிச்சேனை அ. த. க பாடசாலையிலும் இடைநிலைக் கலவியை கார்மேல் பற்றிமா கல்லூரியிலும் கற்று தொடர்ந்து திருகோணமலை வேம்படி மகளிர் (தற்போது தி/மெதடிஸ் பெண்கள் கல்லூரி) கல்லூரியிலும் கற்று வந்தார். இவ்வாறு இருக்கின்ற காலத்திலேயே சமூகக்கட்டுபாடுகள் காரணமாக சிறுவயதிலே படிப்பை நிறுத்திவிட்டு தனது பதினேழாவது வயதில் மட்டக்களப்பு பழுகாமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ஞானம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனாகிய ஆசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களை திருமணம் செய்து இல்லறமாம் நல்லறத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தி வந்தார். அத்தோடு அமரர். சீவரத்தினம், அமமர். நாராயணப்பிள்ளை (அதிபர்), அமரர். சிதம்பரப்பிள்ளை (தபால் அதிபர்), அமரர். சோமசூரியம் (உதவி விவசாயப் பணிப்பாளர்), தனலெட்சுமி ஆகியோரையும் மைத்துனர்களாகப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்.

இவர்களது இல்லற வாழ்விலே மாதவராசா (ஆசிரயர் ஓய்வுநிலை), சோதிராஜா (ஆசிரிய ஆலோசகர் ஓய்வுநிலை), சண்முகராணி, குகானந்தராசா (லண்டன்) கலாராணி (ஆசிரயர்), அருள்ராசா, அன்புராசா (கமநல சேவைகள் திணைக்களம் முகாமைத்து உதவியாளர்), கோமதி (ஆசிரியை), பத்மராணி (கனடா), நவராசா (இலங்கை துறைமுக அதிகாரசபை திருமலை), இந்துமதி (சுவிஸ்), நீதிராசா (கனடா), கதிர்வேல் (ஆசிரியர்) ஆகிய பிள்ளைகளைப் பெற்று "எழு பிறப்பு தீயவை தீண்டா பழி பிறங்கா பண்புடைய மக்கள்" என்ற குறள் கூறும் அறக்கருத்திற்கு ஏற்ப வளர்த்து கல்வியிலும் உயர வைத்தார்.

பிள்ளைகள் அனைவருக்கும் திருமண வயதை அடைந்தும் திருமணம் செய்து மனோராணி, சறோஜாதேவி (ஆசிரியை), ஞானேஸ்வரன் (அதிபர் ஓய்வு நிலை), மாலா (லண்டன்), நாகேந்திரன் (இலங்கை தறைமுக அதிகாரசபை ஒலுவில்), சுதர்சினி (ஆசிரியை), சுகுமதி (மு. உதவியாளர் கமநலசேவைகள்திணைக்களம்), திருச்செல்வம் (கனடா), வினோதினி, சில்வெஸ்ரர் (சுவிஸ்), லிங்கேஸ்வரி (கனடா), விக்னேஸ்வரி ஆகிய மருமக்களையும் கண்டு பக்குவமாக நடாத்தி வாழ்ந்து வந்தார்.

பிள்ளைகளின் இல்லறவாழ்வின் பயனாக மயூரிக்காதர்சன் (கட்டார்), யதுர்ஷன் (பிராந்திய பொறியியலாளர் - HUTCH), பிரார்த்தனன் (பொறியியற் பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), மதுசனன், டிலுக்ஷன், துஜிதராஜா கிருத்திக்கா (Q.S. கட்டார்) சசாந்தினி, ஜனார்த்தனன் (Dubai), தர்ஷிகா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரு (லண்டன்), அக்ஷயா (பொறியியற் பீடம் SLTC), ஷேபிக்கா, துஷேக், நியோமிக்கா, பிரஜித்ராஜ், பிரவின் ராஜ், ஹரிணி, கிஷாளன், தக்ஷிகி, ஹரீஸ் (கனடா), தருஸ் (கனடா), இலக்கியன் (சுவிஸ்), காவியன் (சுவிஸ்), கோவண்ணன், ரிஷிகேஸ் (கனடா), அனிருத் (கனடா), விஷ்வசயன் (கனடா), ஆகிய பேரர் குழாமையும், கேனுஷன், தனன்யா, தர்மிக் ஆகிய பூட்டப்பிள்ளைகளையும் தாலாட்டி சீராட்டி மிக சிறப்பாக வாழ்ந்து வந்தார்.

இவர் தனது கணவரான அமரர். கணபதிப்பிள்ளை (J.P) அதிபராக கடமையாற்றிய காலங்களில் அவரின் பதவியை அலங்கரிக்க முழு ஒத்துழைப்பையும் வழங்கி சிறந்த இல்லாளாகத் திகழ்ந்து வந்தார். பின் 1990 களில் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் இடம் பெயர்ந்து அத்தனை உடமைகளையும் இழந்து மட்டக்களப்பு செங்கலடியில் தனது கணவர் பிள்ளைகளுடன் வசித்து வந்தார். அங்கு அயலவருடனும், நண்பர்களுடனும் அன்புடனும், பண்புடனும் உறவாடி இன்றுவரையும் அவர்களது நட்பை நிலைக்கச் செய்தவர்.

இவரது கணவர் அமரர். கணபதிப்பிள்ளை 2000 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 30ம் நாள் இறைபதம் எய்திய பின்னர் குடும்பப் பொறுப்புக்களைத் தாம் ஏற்று தனது பிள்ளைகளை சிறந்த முறையில் வழிநடாத்தி 2002 ம் ஆண்டில் மீண்டும் திருமலை உவர்மலை வீதியில் சொந்த வீட்டுடன் குடியேறினார்.

தனது சகோதர்களுடன் அருகில் இருக்க வேண்டும் என்ற விருப்பிலேயே திருகோணமலையில் குடியேரினார். உறவுகளுடனும், அயலவருடனும் அன்புடனும் பண்புடனும் பழகி உறவாடிவந்தார் மற்றவர் வியக்கும் வண்ணம் தனது பிள்ளைகளுடனும், மருமக்கள், பேரர், பூட்டர்களுடனும் ஐக்கியமாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தவர். இவரது விருந்தோம்பலும், அறுசுவை உணவும் எல்லோரையும் நேசிக்கும் பக்குவமும் மற்றவருக்கு எடுத்துக் காட்டாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் வாழ்ந்த முறை அவரது இறுதி ஊர்வலத்தில் காணலாம் என்பார்கள் இந்த கொவிட் -19 தொற்று நோய் பரவல் காலத்திலும் கூட அன்னாரது இறுதி ஊர்வலத்தில் நாட்டின் நாலாதிசையிலிருந்தும் மக்கள் வந்து இறுதி அஞ்சலி செலுத்தியமை எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது எனலாம்.

தனது முதுமை காலத்தில் கூட உறவுகளுடனும், நண்பர்களுடனும் தொலைபேசியில் கதைத்து உறவாடுவார். நலம் விசாரிப்பார் வீட்டிற்கு வந்தால் சிறந்த விருந்துடனேயே அனுப்புவார். அன்னாரது அத்தனை பிள்ளைகளும் தங்களுடைய தாயார் மகிழ்ச்சியாக சந்தோசமாக இருக்கவேண்டும் என்பதற்காக அவரை மிகவும் நிறைவாக அவரது தேவைகள் அத்தனையையும் பார்த்து பார்த்த கடைசி நிமிடம் வரையும் எதையுமே பொருட்படுத்தாமல் "அம்மா" என்ற தெய்வம் தங்களுடன் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காக அவரின் தேவைகளை நிறைவேற்றி மன நிறைவாக கவனித்து வந்தமை எல்லோரும் அறிந்ததே.

"பிறப்பு ஒன்று இருந்தால் இறப்பு என்பது நிச்சயம்" என்பதற்கிணங்க இறுதி மூச்சி வரை இறைபணியுடன் இருந்த எம் அன்னை படுக்கையில் இருந்து பிள்ளைகளை கஷ்டப்படுத்தக் கூடாது என்று எண்ணியவர் அவரது எண்ணம் போலவே இறுதி இரண்டு நாட்களும் மட்டுமே படுக்கையாகி 2021 கார்த்திகை மாதம் 11ம் நாள் பகல் 1.10 மணியலவில் பிள்ளைகளும் சுற்றமும் கூடி அழ கோணேஸ்வரப் பெருமானின் பாதங்களில் இரண்டறக் கலந்துவிட்டார். சிவப்பேறெய்தி பேரின்பவாழ்வு பெற ஆத்ம சாந்திக்காக அனுதினமும் வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் தெய்வம்

பூமியின் இலக்கணமாம் பொறுமை காத்தாய் அம்மா
புனிதம் என்ற சொல்லின் பொருள் ஆனாய் அம்மா.....
செல்விருந்து ஓம்பி வரும் விருந்தைக் காத்திருந்தாய்.....
சித்தமெல்லாம் சிவனே என்று போற்றி வந்தாய் அம்மா.....
சினம் கொள்ளா மனங்கொண்ட சீதேவி நீ அம்மா.....
திறன் அனைத்தும் கூறும் குறள் ஆனாய் அம்மா.....
இல்லறமாம் நல்லறத்தில் இனிய இல்லாளாய்.....
ஈன்றெடுத்த உன் மக்களுக்கு ஏணியாய்
ஏற்றமிகு வாழ்வுதனை ஏற்றி வைத்தாய் அம்மா
நலம் நிலைத்த எழில் பெறு நன் மக்கள்
பதின்மூவரது நல்வாழ்வை பாரினிலே உயரவைத்தாய்.....
கல்வியிலே தடம்பதித்த பேரர்குழாமையும்
கண்ணாரக் கண்டு களிப்புற்றாய் அம்மா.....
உற்றவரை உறவுகளை நித்தம் பேணி.....
உடன் பிறந்தோர்க்கு உறுதுணையாய் நின்றாய் அம்மா.....

இத்தனையும் போதும் இனி உனக்கு.....
என்று ஈசன் நினைத்தானோ.....
பொல்லாத காலனுக்கு பொறுக்கவில்லையே.....
கூட்டைக் கலைத்து விட்டான்.....
குஞ்சுகளைத் தவிக்க விட்டான்.....
எந்நாளும் எமக்கு இன்பமென்பது சொந்தமில்லை
இறையடியில் இருக்கும் நீங்கள்
எங்களை வழி நடத்தும் எங்கள் தெய்வம்

மகன்
**சோதிராசா குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பம்மாவிற்கு!

என் உயிரோடு
உறைந்து விட்ட உணர்வாய்,
என் இதயத்தில்
இணைந்து விட்ட இறைவாய்,
என் சுவாசத்தோடு ஐக்கியமாகிய
சொர்க்கமாய்,
என் மனதில்
என்றும் மறையாத அப்பம்மாவிற்கு
என் இதய அஞ்சலி!

அன்பு, பாசம், பணிவு
இம் மூன்றின் மொத்த உருவாய்
வடிவெடுத்து வாழ்வியலின்
பாதையை வகுத்தெடுத்து
உங்களைப் போல் வாழ்ந்தவரை
உலகில் நான் கண்டதுமில்லை! - இனி
காணப் போவதுமில்லை!

மூத்த பேரப் பிள்ளைகள்
உங்கள் மடியினில்
தவழ்ந்திருந்தாலும் - நீங்கள்
என் மீது காட்டிய கருணையில்
நான்தான் மூத்த பேரப்பிள்ளையென
எனக்கு நானே
சூடிக் கொண்டேன் பாச மகுடத்தை!

முதுமை உங்களை
முழுமையாக குத்தகை எடுக்க
முனைந்தாலும் - உங்கள்
நேர்த்தியான ஆடை அணிகலன்களில்
தோற்றதுதான் உண்மை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் முதல்
வெளியூர் பயணமென்றால்
உங்கள் வீடுதான் அப்பம்மா!
'நாளை அப்பம்மாவிடம் போவோம்'
அப்பா கூறினால்
அன்றிரவு என் விழிகள்
உறக்கத்தை மறக்கும்
உள்ளத்தில் உங்கள் உருவும் அன்பும்
ஆக்கிரமித்துக் கொள்ளும்!

என் நாக்கும் மனமும்
திகட்டாத வகையில்
நண்டுக் குழம்புக் கறியும்
மரவள்ளிக் கிழங்குச் சொதியும்
சமைத்து தருவீர்களே அப்பம்மா
இனி அந்தக் கைப்பக்குவத்தை
யாரிடம் காண்பேம்?

எதையும் நேரப்பிரகாரம்
செய்து முடிக்கும் உங்கள்
நேர்த்தியை நினைக்கும் போதெல்லாம் - என்
விழிகள் விரிகின்றன வியப்பால்!

சமையலறையைக் கூட
சொர்க்கமாய் மாற்றுவதில் - நீங்கள்
இன்னொரு பிரம்மா என்றால்
அதை மறுப்பவர் யாருளர் இங்கு?

உங்களைப் போல்
உருவத்தில் நானென்று
உறவுகள் பேசிடும் போது
உலகமே என் உள்ளங்கைக்குள்
வந்ததாய்
உவகையோடு பெருமையும்
சுரக்குதம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நினைவு தெரிந்த நாள் முதலாய்
ஆஸ்துமாவில் அகப்பட்டு
மூச்சு இழுக்கும் உங்கள் உருவையே
என் விழிகள் அறியும் - அந்த
இறுதி நாளில்
மூச்சு இழுக்காத உங்களைப் பார்த்ததிலிருந்து
என் மூச்சு இழுக்கத் தொடங்கி விட்டதப்பம்மா - உங்களை
இழந்த துயரில்!

உங்கள் நினைவாய்
நான் கொண்டு வந்த உங்கள்
சோட்டியையும், சேலையையும்
நான் அணியும் போதெல்லாம் - என்
மனதில் தோன்றும் உணர்வுகளுக்கு
உருவம் கொடுக்க முடியாமல்
நான் தோற்றுப் போகின்றேன்!

பூட்டிப் பிள்ளைக்கென - நீங்கள்
தந்த சிவப்புக் கல் சிமிக்கியும் சேலையும் கூட
உங்கள் பிரிவால்
அதிர்ந்து அலறுதம்மா!

குறைந்தது நான்கு தடவையாவது - உங்கள்
குரல் தொலைபேசி வழியாய்
அன்பெனும் தேனை
அமுதமாய் வழங்கும் - இனி
என் செவிகள் - உங்கள்
அமுதத் தேனையிழந்து செவிடாக்கிவிடுமோ?

இறுதி மூச்சு வரை
இடையறாமல் இறைபணி செய்து
இறையோடு இணைந்துவிட்ட
இதய தெய்வமே!
ஆண்டவனடியில் அமர வாழ்வு பெற
வாழ்த்துகிறேன்! வணங்குகிறேன்!

பேரப்பிள்ளைகள்
**மயூரிக்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்துவம் நிறைந்த மாண்புடைய தாயார்!

எங்கள் உள்ளமெல்லாம் எப்பொழுதும் நிறைந்திருந்த பாசப்பெருந்தகையே! நல்ல பண்புகள் நிறைந்திருந்த அம்மாவே! பெற்றபிள்ளைகள் அத்தனைபேரையும் உற்றபடிவளர்த்து உயர்வான வாழ்க்கையை அமைத்துக்கொடுத்து, இன்பநிலை எங்களுக்குத்தந்த நீங்கள் எங்குதான் தாயாரே பறந்து சென்றீர்கள். நெஞ்சம் நிறைதுயரத்தால் நினைத்து அழுகின்றோம்.

நான் எனது குடும்பத்தோடு கல்முனையில் வசிக்கின்றேன். நேரகாலம் கிடைக்கும் போதெல்லாம் நீங்கள் இருக்கும் திருகோணமலை வீட்டுக்கு வந்தால் போதும். உள்ளம் மகிழ்ந்து எனது பிள்ளைகளைக் கட்டியணைத்து முத்தம் கொடுப்பீர்கள். நாங்கள் வருவதற்கு காலம் தாமதித்தால் தொலைபேசியில் அழைத்து 'என்ன என்னைப்பார்க்க உங்களுக்கு விருப்பமில்லையா' என்றெல்லாம் கேட்பீர்களே அம்மா. இனிமேல் எங்களைக் கூப்பிடாத அளவுக்கு தொலைதூரம் சென்று விட்டீர்களே!

உங்களிடம் நான் கண்டவாழ்க்கை முறைகள், வீட்டிற்கு வருவோரை முகமலர்ச்சியோடு வரவேற்று, அன்பாகப் பேசி சிற்றுண்டிகள் வழங்கி, நேரம் கடந்தால் உணவுகள் வழங்கி உபசரிக்கும் நல்ல உயர்வாண பண்புகள் தான். இவற்றையெல்லாம் மற்றவர்கள் சொல்லக்கேட்கும் பொழுது எனது உள்ளம் மிகுந்த மகிழ்ச்சிஅடையும்.

நீங்கள் பாய்படுக்கையென்று நோய்நொடிகளால் நீண்ட நாட்கள் துன்பப்படாமல், எங்களுக்கும் அருகிலிருந்து கவனிக்கும் நிலைதனைத் தராமல் ஓரிருநாட்களில் வருத்தப்பட்டுத் திடீரென இவ்வுலகைவிட்டுச் சென்றுவிட்டீர்கள். எப்பொழுதும் எங்களைப் பற்றியும், எங்கள் சுகங்களைப்பற்றியும் விசாரித்து புத்திமதிகள் எல்லாம் கூறி எங்களை மகிழ்ச்சியோடு வாழவைத்த நல்ல வாழும் நெறிமுறைகளை வகுத்து வாழ்ந்த அம்மவே! இனிமேல் எங்குதான் உங்களைக் காணப்போகின்றோமோ!

அன்பு நிறைந்த அம்மாவே! தன்னிகரில்லாத எங்கள் தெய்வமே! இப்பொழுது எம்மையெல்லாம் விட்டு இறைவனுடைய பாதமலர்கள் சேர்ந்த உங்களை எப்பொழுதும் எங்கள் இதயங்களில் வைத்து பக்தியோடு துதிப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ஆன்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்
**அன்பு நிறைந்த மகள் ராதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியும் விழிகளில் ஒளிரும் நிலவானாய் . . .

01. அகரத்தின் முகவரியாய் அம்மாவாய் ஆனவரே!
அழகுதுரையும் "லெட்சணமும" பெற்றெடுத்த இலட்சமே!
சிகரத்தை தொடவைத்த செல்வக் களஞ்சியமே
"சிவபதம்" சேவடியில் செம்மொழியாய் வாழ்ந்திடுக!!

02. மூதூர் என்றாலே முத்தான ஊர்தானே
முததமிழின் சொத்தேநாம் முகவரியை இழந்தோமே!
சீரூர் பாலத்தடி சேனையிலே பிறந்தமாதே
சீர்பெறவே சீவித்தீரே செந்தமிழர் புவிமீதே!!

03. அன்பை சுரந்தீரே! ஆற்றலை ஈந்தீரே!
அறிவாலயம் அனுப்பி அருந்தாகம் தீர்த்தீரே!
பண்பை மறப்போமோ. பாசத்தை இழப்போமோ?
பேர்பெற்ற பெருமாதே "பரமபதம்" உன்வசமே!!

04. பெண் குலத்தின் பெருமை சேர்த்தீர்!
பிறந்த பயனை சிறந்து அடைந்தீர்!
கண்ணொளியாய் வாழ்ந்து காவியம் ஆகிவிட்டீர்!
"கனிமொழியே" கடவுள் மொழியெனவே விளங்கிடுக!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. குடும்பத்தின் குல விளக்கே குன்றா ஒளிச்சுடரே!
காலனேன் அணைத்தானோ கடவுளனே கூறாயோ?
பீடுடைய பெருந்திருவே வாடுகிறோம் நாங்களம்மா!
கூடுவிட்டு சென்ற கதை குடும்பத்தை வாட்டுதம்மா!

06. கணபதிப்பிள்ளை ஆசானை கணவனாய் ஏற்றிரே!
கச்சிதமாய் வாய்த்த கனம்மா ஆனீரே!
மணவாழ்வில் மாநிலத்தில் மங்கலமே என்றுமம்மா
குணவதியே கலங்குகிறோம் கரம்கூப்பி வணங்குகிறோம்.

07. பெண்மணிகள் ஐவருடன் பேசரிய ஆண்கள் எண்மருமே
பூமியிலே பெருநிதியாய் தந்தாயே ஏந்திழையே
வண்ணமாம் வாழ்வினிலே வருவதெல்லாம் விதிவசமே
ஆண்டுதோறும் அழுவோமே மாண்டஉமை மறவோமே!!



**அன்பு மகன்**
**அன்புராசா குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனின் பிரவாபம் (அருள்)

சவளக்கடையைப் பிறப்பிடமாகக் கொண்ட அழகுத்துரைக்கும் பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இலட்சண பிள்ளைக்கும் மூதூர் பாலத்தடிச்சேனையை வசிப்பிடமாகக் கொண்டு மூத்த மகளாகப் பிறந்த கனகம்மா எனப் பெயரிடப்பட்ட அம்மாவே உங்கள் வாழவின் சில நிகழ்வுகள்

பாலத்தடிச்சேனையில் ஐந்து சகோதரிகளுடனும் ஒரு தம்பியுடனும் அக்காவாகப் பிறந்த நீங்கள் திருப்பழுகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி ஞானம்மா தம்பதியினரின் மூத்த மகனை ஆசிரியர் பணியின் இருக்கும் போது மணமுடித்து உங்கள் இல்லற வாழ்வினை பாலத்தடிச்சேனையில் ஆரம்பித்தீர்கள் உங்கள் இல்லற வாழ்வின் அன்பினை உணர்த்தும் முகமாக எட்டு ஆண்களும் ஐந்து பெண்களுமாக பதின்மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்து. அன்பின் கருணையோடு வளர்த்து வாழவைத்துள்ளீர்கள்.

அதில் ஆறாவதும் இரட்டைப்பிறவியுமாக பிறந்தவர்களில் நான் தான் அருள். “அருள்” என்று நீங்கள் அழைத்ததாலே அன்பு தான் தெரிந்தது அம்மா உங்களின் அன்பிற்காக கடல் கடந்து ஓடி ஓடி உழைத்த என் பாதங்கள் உங்களைக் காண்பதற்காகத் தான் தாய் நாடு வந்தது அம்மா! நீங்கள் நலமாய் இருந்தால் போதும் என்று நினைத்தேன். மூதூரில் இருந்து நான் மலைக்கு வரும் போதெல்லாம் அம்மா எனக்கு அன்னமிடுவது மட்டுமல்லாமல் நான் வெளிக்கிடும் வேளையிலும் அன்னத்தை கொடுத்து அனுப்புவீர்கள்

இனிநான் வரும் போதும் போகும் போதும் என்னை யாரம்மா கவனிப்பார்கள். அயலவரை இன்முகத்துடன் அரவணைத்து நீங்கள் உபசரிப்பதனால் நம் அயலவர்கள் உங்களை பாசத்தோடு அம்மம்மா என்று அழைப்பார்களே அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா நீங்கள் எங்களை பாராட்டி சீராட்டி கஷ்டப்பட்டு வளர்த்த கதைகளை நான் என் மனைவி மக்களுடன் அடிக்கடி பகிர்வதுண்டம்மா. அம்மா என் குடும்பத்தவருடன் சேர்ந்து உணவு உண்ணும் போது "எங்கட அம்மாட சொதிக்கு பிறகு தான்" என்று சொல்லி சந்தோசப்படுவேனே அம்மா! இனி யாரைப் பற்றி அம்மா நான் கதைப்பேன்? என் எதிர்கால நிலையெண்ணி உங்கள் உள்ளம் உடைந்து போனதை நான் அறிவேன் தாயே!

உங்கள் பேரப்பிள்ளைகளால் நீங்கள் மகிழ்ந்திருந்த தருணங்களை மீண்டும் மீட்டும் போது கண்களில் கண்ணீர் கனக்கிறது அம்மா. நான் பாலத்தடிச்சேனையில் இருந்து வெளிக்கிடும் போது எங்கே போகிறாய்! அருள் என்று யாராவது கேட்கும் போது மலைக்கு அம்மாவிடம் போகிறேன் என்று சொல்லுவேன் அம்மா இனி இத் தருணம் எனக்கில்லையே அம்மா. ஓடி ஓடி உழைத்த உங்கள் பாதங்கள் சேவை போதும் என எனது கரங்களிலே உங்களது உயிர் இறைவனடி சேர்ந்தது ஏனோ அம்மா! உங்களைப் பிரிந்த ஒரு கணத்தில் என்ன செய்வதென அறியாது உடைந்து விட்டேன் அம்மா!

சிறப்புடன் இவ்வுலகில் வாழ்ந்த உங்கள் உயிர் இறைவனடி சேர வேண்டுமென மன்றாடுகிறேன் அம்மா

உங்கள் அன்பு மகன்
**அருள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவுத் துயரின் பிடியில் வாழ்வு இன்று

எழுத்தில் சொல்ல வந்தேன் – தீரா
என் சோகம் எடுத்துச் சொல்ல வந்தேன்....

இடிந்து போன மனதின் – இன்ப
இயல் இல்லா ஏட்டின்,
ஏக்க நிலை கொண்டு ஏனோ – இன்று
கவிதை சமைக்க வந்தேன்...

தூக்கம் இடிந்து தவித்து நின்றேன்
தூக்கி வளர்த்த உம் மறைவு சேர்த்து
தாக்கம் இணைந்து தயங்கி நின்றேன் – சோகம்
தேக்கி உடல் அழிந்து நின்றேன்...

வந்த பிணி விளக்கி ஓடிடவே
வாழ்வு முழுதும் வழி துணையாய் நின்று
உன் வாழ்வழித்து என் வாழ்வு அளித்தீர் – ஆனால்
இன்று வானம் தழுவி – என்
வாழ்வில் (இடை)வெளி காட்டி நின்றீர்

உம் உதிரம் தந்து உழைப்பூட்டியும்
என் உழைப்பை தவிர்த்து – இன்று
உலகம் நீத்து நம் உறவு தன்னை
உடைத்தெறிந்து நல் பந்தம் தான் தடுத்து
இறைவன் பகடை ஆட்டம் ஆடியதேனோ,

பாவம் செய்த மனிதனாய்
பிறந்த என் பாவம் தீர்க்க
பாவி எனக்கோர் பாடம் புகட்ட எண்ணி
படைத்த இறைவன் பகர்ந்த
வீண் படிப்புதான் இதுவோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கி இன்று இன்பம் தொலைந்து
கலங்கி கன்று மனம் உடைந்து - தாயைத்
தழுவி என் சோகம் களைந்து - கண்ணீர்
மழ்கி கனவு அழிந்து
கண்கள் முன்னே கடவுள் எப்போது
உம்மை காட்ட முன் வாராரோ எனக்கு.

காணாத கணம் முழுதும்
தீராத சோகம் ஏற்று
ஆறாத கண்ணீர் கழியும்
போராதோ என்று நின் உள்ளம் ஏங்க ;

தீராத துயரம் தீர்த்து - வாழ்வில்
மாறாத நிலை போக்க - கண்
பாராத இறைவன் மகிழ்ந்து - வரம்
தாராதோ என் வாழ்வில் தொடர்ந்து...

வந்த பிரிவில் வாடி அழியும் மனம் - வாடி
வதைக்கும் வாழ்வு நெடுந்தொடரில் என் நாட்கள் தினம்.
அம்மா!!!

உங்கள் அன்பு மகள்
**கோமதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

உன்னை நினைக்க என் கண்களில் கண்ணீர் வருகிறது. எங்கள் 13 பேரையும் பெற்ற தெய்வம் எங்களை வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாய் என்று நான் தாயான பின்னர் உணர்ந்து கொண்டேன். உன் வயிற்றில் நான் பிறக்க என்ன புண்ணியம் செய்தேன் தாயே ஒவ்வொரு நாளும் வேலை முடிந்து வந்தவுடன் உன்னுடன் கதைப்பேன் இனி யாருடன் கதைப்பேன். நான் எடுக்காவிட்டால் ஏன் எடுக்கவில்லை என்று கவலைப்படுவாய் எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பாள் எங்கள் அம்மா. நீ இலலையென்று என்னால் நினைக்கமுடியவில்லை இனி யாரை அம்மா என்று கூப்பிடுவேன்? என்றும் எங்களுடன் இருந்து எங்களை வழி நடத்தும் தாயே! எவ்வளவோ எழுத வேண்டும் என்று நினைத்தேன் ஆனால் கண்ணீர் சொட்டுகிறது. என்றும் என் உள்ளத்தில் தெய்வமாக வீற்றிருப்பாய் அம்மா. என் உயிர் ஏன் இவ்வளவு விரைவில் என்னை விட்டு போனாய். எப்படியெல்லாம் உன்னை வைத்திருக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் இது கனவாக இருக்காதா! என்று மனம் ஏங்குகிறது. அம்மா :- என் உயிர்! என் தெய்வம்.!

அன்பு மகள்

**இந்து**

அம்மம்மா ஒரு நல்லவர் எப்பொழும் அம்மாவுடன் கதைக்கும் போது என்னுடனும் கதைப்பார் நான் அங்கு வந்தபோது நான் எப்படி இருக்க வேண்டும் என்று புத்திமதி கூறினார். என்னுடைய அம்மாவின் சிறுபராயத்தை என்னிடம் கூறி மகிழ்தார் நான் உங்களை தேடுகிறேன் அம்மம்மா

**காவியன்**

நான் உங்களை MISS பண்ணுகிறேன் அம்மம்மா

**இலக்கியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையோடு இணைந்திருப்பாய்!

அன்பு நிறை மாமியே! அகம் நிறைந்த உத்தமியே!
பண்பு தனைப் போதித்த பாசம் நிறைந்தவரே!
எங்களை மறந்து இவ்வுலகினைவிட்டு
இறையைத்தேடி அவ்வுலகம் சென்றீரோ
இதயம் சுக்குநூறாய் உடைந்து வாடுகின்றேன்
தாய்போல இருந்து தகுந்த புத்திமதிகள் கூறி
சிந்தை மகிழ்ந்திருக்க சிறப்புகள் செய்தீரே!
மகத்துவம் பலநிறைந்த மாண்புமிகும் மாமியாரே
அகத்தினுள் மாசு அணுவளவும் இல்லாமல்
எவருக்கும் நன்மைகள் எக்காலமும் புரியும்
நன்னெறி அனைத்தையும் நாள்தோறும் வைத்து
மனங்கோணாமல் மாநிலத்தில் வாழ்ந்தீர்கள்
விருந்தோம்பல் என்றால் விருப்பந்தான் உங்களுக்கு
வீட்டிற்கு வருவோரை வரவேற்று களிப்போடு
அரவணைத்து அகம்மலர்ந்து
உணவுகள் வழங்கி உபரிக்கும் நல்ல
உயர்வான பண்புகளை உம்மிடந்தான் கண்டேன்
இவற்றையெல்லாம் இங்கு எண்ணிப்பார்க்கையிலே
தவப்பேறுதான் எனக்கு மாமியாய் உங்களை அடைந்தது
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்து
தெய்வநிலை அடைந்த சீர்மிகும் மாமியாரே!
ஆண்டவன் பாதமலர் பற்றிப்பிடித்து
வேண்டும் சுகமெல்லாம் விருப்போடு பெற்று
பேரின்பநிலையை அடைந்திட இவ்வேளை
எல்லாம் வல்லோனாம் இறையோனைத் துதிக்கின்றேன்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்புமிகு மருமகன்
R. **நாகேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவண்ணனின் உளக்குமுறல்

என் செல்ல அப்பம்மா எங்கே போனீர்கள்? நாங்கள் தினமும் அப்பா வேலைவிட்டு வந்தவுடன் அப்பா, அம்மா நானும் உங்களை ஒவ்வொரு நாளும் வந்து பார்ப்போம் நான் வந்ததும் எனக்கு குளிர்சாதனப் பெட்டியில் ஏதாவது சொக்லேட் எடுத்துத் தருவீர்கள் நான் வராவிட்டால் தொலைபேசியில் சுகம் விசாரிப்பீர்கள்.

அடிக்கடி எனக்கு காய்ச்சல் வருகிறது என்று சொன்னதும் அம்மா எனக்குக் காய்ச்சல் பார்க்கும் தேமோமீற்றரை கொண்டு வந்து உங்களுக்கும் காய்ச்சல் பார்ப்பார்.

நான் உங்களைப் பார்க்க வந்தவுடன் எப்படி அப்பம்மா சுகமா இருக்கிறீர்களா? என சுகம் விசாரித்து விட்டு தான் TV யைப் பார்ப்பேன். பின்பு நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போகும் போது போய் வருகிறேன் என்று சொன்னால் என்னைப் பார்க்க வந்தாயா இல்லை TV யைப் பார்க்க வந்தாயா என்று கேட்பீர்கள். இனி யார் கேட்பார்? இனி உங்களை நான் எங்கே காண்பேன் அப்பம்மா. இங்கு உள்ள பேரக்குழந்தைகளில் நான் தான் வயது குறைந்தவன் என்றும் எல்லாம் எனக்குத் தான் வேண்டும் என்று கேட்பேன். இனி யாரிடம் கேட்பேன் அப்பம்மா?

4-11-2021 இந்தத் தீபாவளிக்கு நீங்கள் தந்த காசை நான் காற்சட்டைப் பைக்கற்றினுள் வைத்து விட்டேன் அதை மறந்தும் விட்டேன். பிறகு அம்மா உடுப்பு கழுவும் போது கண்டு எடுத்தார். அதுதான் உங்கள் கடைசி நினைவுப் பரிசா எனக்குக் கிடைத்தது அப்பம்மா நீங்கள் இல்லாத வீடு தலையில் கிரீடம் இல்லாதது போல் காட்சியளிக்கின்றது. நீங்கள் எங்களை இறைவன் பாதத்தில் இருந்து எங்களை ஆசீர் வதிக்குமாறு கேட்டுக் கொள் கின்றேன் அப்பம்மா.

பேரன்

"ஓம் சாந்தி சாந்தி"

**நவராசா கோவண்ணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மாமி (அம்மா)

ஈன்றெடுத்த தாயே - ஒன்று
எல்லோருக்கும் உண்டு
இன்னுமோர் தாய் - தாரம்
தந்தது என்று சொல்ல
அம்மா நீங்கள் இருந்தீர்கள் - உங்களிடம்
கற்றுக் கொண்ட பக்குவங்கள் ஏராளம்

எளிமை என்றால் என்றால் என்?
சிக்கனம் என்றால் என்ன?
உபசரிப்பு என்றால் என்ன?
சிலருக்கு மட்டுமே கிடைக்கும் பண்புகள்
அம்மா உங்களிடம் ஏராளம் கற்றுக் கொண்டேன்.

உங்களிடம் கற்றுக் கொண்ட பண்புகளை
காலமெல்லாம் நாம் கடைப்பிடித்து - உங்கள்
பேரப்பிளைகளுக்கும் உங்கள் வழி
சொல்லி வாழ வைப்போம் என்று
மனதார வேண்டி நிற்கின்றோம் - உங்கள்
ஆத்மா சாநதிக்காக இறைவனிடம்
பிரார்த்திக்கின்றோம்.

மருமகள்

**திருமதி. சுதர்ஷினி அருள்ராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்க்கபதியில் சுகமோடு வாழ்க!

அம்மம்மா என்று நாங்கள் ஆசையோடு அழைத்த அன்புத் தெய்வமே! மண்ணைவிட்டு மறைந்துபோய் விட்டீர்களா. கல்முனையில் நாங்கள் மூவரும் இருக்கின்றோம். நீங்களோ திருகோணமலையில் வாழ்ந்தீர்கள். எங்களுடன் தொலைபேசியில் உரையாடும்போதெல்லாம் நன்றாகப் படிக்க வேண்டும் நல்லபிள்ளைகளாக வளர வேண்டும் என்றெல்லாம் புத்திமதிகள் சொல்லுவீர்களே அம்மம்மா! இனிமேல் எங்களுக்கெல்லாம் இப்படி அறிவுரைகள் கூறுவதற்கு உங்களைப்போல் யார்தான் இருக்கின்றார்கள்.

எவ்வளவோ கதைகளெல்லாம் எங்களுக்குக் கூறுவீர்கள். மடிமேல் தூக்கிவைத்து முத்தம் தந்து, முகம் மலர்ந்து நீங்கள் புரியும் அந்த புன்சிரிப்பை இனிமேல் எங்குதான் காணப்போகின்றோமோ? உங்களை நினைக்கும் பொழுது எங்களுக்கு அழுகை அழுகையாய் வருகின்றதே.

நாங்கள் அம்மாவோடும், அப்பாவோடும் உங்களைப் பார்க்க வந்தால் போதும். எங்களை அப்படியே அள்ளி அணைத்து முத்தம் கொடுப்பீர்களே! அதுபோல இனிமேல் எங்களுக்கு யார்தான் முத்தம் தருவார்களோ.

திடீரென்று நோய்வாய்ப்பட்டு மறைந்து போனீர்களே!. நினைக்க, நினைக்க நெஞ்சம் வாடுகின்றது. இப்பொழுது நீங்கள் எங்களை விட்டு மறுமை உலகத்துக்கு சென்றுவிட்டீர்களே அம்மம்மா!. அவ்வுலகம் சென்ற உங்களது ஆன்மா சுவர்க்கபதியில் சுகந்தங்கள் பல பெற்று, எந்நாளும் திகழ்ந்திருக்க எல்லாம் வல்ல ஆண்டவனை நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து துதிக்கின்றோம். அம்மம்மா!

உங்களுடைய அன்பும், பாசமும் நிறைந்த
பேரப்பிள்ளைகள்
**N. அக்ஷயா, N. ஷேபிகா, N. துஷேச்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் பிரிவுத் துயருடன் . . .

திருமலை மண்ணில்
திகழ்ந்திடு மணியே
அருமையாய் அன்னாள்
அழகுதுரை ஈன்ற
பெருமைசேர் கனகம்மா
பெண்ணாகி வளர்ந்தாய்
இருமனம் ஒன்றாய்
இல்லறம் கண்டாய்......!

கனகம்மா தாயே
கணபதிப் பிள்ளையை
மனமொத்து அன்றே
மணமொன்று செய்தாய்
குணமொத்த பிள்ளைகள்
குதூகலம் பெறவே
நலமுற்று வாழ்ந்தாய்
நானிலம் புகழே....!

சிறுவயது முதலாய்
சிந்தனைகள் ஊட்டி
வறுமையில்லா வாழ்வை
வழங்கியவள் நீயே
மறுமையிலும் மறக்கா
மாணிக்கமே அம்மா
இறுதிவரை உன்னை
இதயத்தில் வைப்பேன்....!

உணவூட்டி சீராட்டி
உறக்கத்தை தினமூட்டி
குணமூட்டி குவலயத்தில்
குறையற்ற மனிதனாக்கி
கணத்திலே காலனுக்கு
காற்றிலே பறந்தோடி
நினைவூட்டிச் சென்றாயே
நித்தமும் மறப்பேனோ...!

காலங்கள் கடந்தாலும்
கவலைகள் மறந்தாலும்
ஞாலத்தில் அம்மாவுன்
நாமங்கள் மாறாது
சாலமுற வாழ்ந்தாலும்
சங்கதிசேர் மரணமே
ஓலங்கள் ஒருபோதும்
ஓயாது வாழ்வினிலே....!



பிரிவின் துயரில்
**மகன் நீதிராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமிக்கு ஓர் இரங்கற்பா

கனகம்மா நாமத்திற்காய்
கண்ணீருடன் ஓர்துளிகள்
மனமெல்லாம் நினைவலைகள்
மாமியே உனைநினைக்க...!

தாயாகிப் பார்த்திட்டாய்
தனிமையிலும் காத்திட்டாய்
நோயாலே நானிருக்க
நொந்தவளும் நீதானே....!

உறவுகளின் பயணத்திலே
உன் மகனை கரம்பற்ற
மறவாத மகிழ்வுகளை
மரு மகளாக்கி தநதீரே.....!

பேரப்பிள்ளை அழுதாலோ
பெற்றப் பிள்ளை அழுதாலோ
சேரப்பற்றும் உன் கரங்கள்
செகத்தில் யார் இனியெனக்கு....!

பணத்தாசை உமக்கில்லை
பாகுபாடும் உமக்கில்லை
குணத்தோடு வாழ்ந்திட்ட
குறைவற்ற மாமியேநீ.....!

உன்னைப்போல் ஓர் மாமி
உலகத்தில் எவருண்டோ
சின்னதோர் இழபபில்லை
சிதறுதே மனமெல்லாம்.......!

என்னோடு ஒன்றாக
என்னாளும் உறவாட
அன்னைபோல் மாமியே
ஆருண்டு இனிமேலும்......!

உறவுகள் சரிந்து போக
உணர்வுகள் கலைந்து போக
இறப்பதும் இறைசெயலே
இடைவிலகிப் போனாயே......!

மறுபடியும் மாமியாய்
மண்ணிலே பிறந்து வர
இறையடியை வேண்டுகிறேன்
ஈகை கொண்ட மாமியே...!

ஓடும் விதி வாழ்விலே
ஓயாது மரணமே
வாடும் மனம் மாறுமே
வாழ்விலிது நியதியே மாமி....!

உங்கள் அன்பு மருமகள்
**விக்னேஸ்வரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளையின் பிறந்தநாள் நிகழ்வில் கணவருடன்



80வது பிறந்தநாள நிகழ்வில் சகோதரிகளுடன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் இந்துமதியின் குடும்பத்துடன்



மகள் ராணியின் குடும்பத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளையின் பிறந்த நாள் வைபவத்தில்
கோமதி மற்றும் நவராசா குடும்பத்துடன்




மகன் குகண் மற்றும் பேரப்பிள்ளையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் பாமதியின் குடும்பத்துடன்




சுவிஸ் சென்றபோது மருமகன் மற்றும் பேரப்பிள்ளையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77வது பிறந்ததினத்தில் மகன் அருள்ராசா குடும்பத்துடன்




77வது பிறந்ததினத்தில் மகன் அன்புராசா குடும்பத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ் சென்றபோது மகள் இந்துமதி
மற்றும் மகன் நீதிராசாவுடன்



மகன் பேரப்பிள்ளை மற்றும் பூட்டபிள்ளையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளையின் பூப்புனித நீராட்டு விழாவில் பிள்ளைகளுடன்



மகன் நீதிராசாவின் திருமணத்தின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77வது பிறந்ததினத்தில் மகன் கதிர்வேல் குடும்பத்துடன்




பேரனின் திருமணத்தில் மகள் ராதாவின் குடும்பத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு என்றால் என்ன?

நீரிழிவு என்பது, இரத்த குளுக்கோஸை உங்கள் உடலால் சரியாகப் பயன்படத்த முடியாமல் போகும்போது ஏற்படுகின்ற ஒரு நிலையாகும். நம்முடைய உடல்கள், இரத்தத்திலுள்ள குளுக்கோஸை ஆற்றலுக்காகப் பயன்படுத்துகின்றன. சப்பாத்தி, சாதம், ரொட்டி, உருளைக்கிழங்கு, பாஸ்தா, பிஸ்கெட்டுகள், இனிப்புகள், சுறுசுறு பானங்கள் மற்றும் பழச்சாறுகள் போன்ற, கார்போஹைட்ரேட்டு நிறைந்த எந்தவொரு உணவை சாப்பிட்டாலும் அல்லது குடித்தாலும் இரத்த குளுக்கோஸ் அளவு அதிகரிக்கும்.

உங்களுக்கு நீரிழிவு இருக்கும்போது, உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவுகள் உயர்ந்தே இருக்கும். ஏனென்றால், உடலுக்குத் தேவைப்படும் சக்திக்கு ஏற்ற அளவுக்கு உடலால் குளுக்கோஸை சரியாகப் பயன்படுத்த முடியாது. அதைச் சரிசெய்யாவிட்டால், அது சிக்கல்களுக்கு வழிவகுக்கலாம். அதாவது நீங்கள் பார்வையை இழக்கலாம், உங்களுக்கு மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்படலாம், அல்லது உறுப்புநீக்கம்கூட செய்யப்படலாம்.

அடுத்தது என்ன?

1. நீரிழிவைக் குணப்படுத்த முடியாது, ஆனால் அதை உங்களால் கட்டுப்பாட்டில் வைக்கமுடியும்.
2. உங்களுடைய இரத்த குளுக்கோஸ், இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்டிராலை வழக்கமான அளவுக்குக் கொண்டு வருவதற்கு, உங்கள் மருத்துவரிடமோ அல்லது நர்ஸிடமோ நீங்கள் பேச வேண்டும். இதற்காக நீங்கள் மருந்து எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தாலும், உங்கள் உணவில் நீங்கள் மாற்றங்களைச் செய்வதுடன், மேலும் அதிகமாக உடற்பயிற்சியும் செய்ய வேண்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என்னென்ன உணவுகளைச் சாப்பிடலாம்?

1. நீங்கள் சாப்பிடும் உணவின் அளவைக் குறைத்துக்கொள்ளுங்கள், உதாரணமாக சப்பாத்தி, நான் (அல்லது இதர ரொட்டி வகைகள்) மற்றும் சாதத்தை ஒரே சமயத்தில் சாப்பிடாதீர்கள். ஏதாவது ஒன்றை மட்டும் சாப்பிடுங்கள்.
2. காய்கறிகள் (கத்தரிக்காய், கேரட்டுகள் போன்றவை), பழம், பீன்ஸ் மற்றும் தால் ஆகியவற்றை அதிகமாகச் சாப்பிடுங்கள்.
3. மீனை அதிகமாகவும் (குறைந்தது வாரத்திற்கு இரண்டு முறை) இறைச்சியைக் குறைவாகவும் சாப்பிடுங்கள்.
4. கொழுப்பைக் குறைவாக சாப்பிடுங்கள். கொழுப்பு மற்றும் நெய்க்கு பதிலாக தாவர மற்றும் ஆலிவ் எண்ணெயை உபயோகியுங்கள். ஆனால் அதையும் குறைவாகவே பயன்படுத்துங்கள்.
5. பிஸ்கெட்டுகள், சாக்லேட், மொறுமொறுப்பான தீனிகள், பாம்பே மிக்சர் மற்றும் கொழுப்பும் சர்க்கரையும் அதிகமாக உள்ள மற்ற சிற்றுண்டிகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.
6. மணத்திற்கு, உப்புக்கு பதிலாக மிளகாய்கள், மூலிகைகள் மற்றும் மசாலாப் பொருட்களை உபயோகியுங்கள்
7. கொழுப்பு நிறைந்த பாலுக்கு பதிலாக, கொழுப்பு நீக்கிய அல்லது பாதியளவு கொழுப்பு நீக்கிய பாலைப் பயன்படுத்துங்கள்.
8. ஆற்றல் பானங்கள், சுறுசுறு பானங்கள், மில்க் ஷேக்குகள் மற்றும் பழச்சாறுகள் போன்ற சர்க்கரை சேர்த்த பானங்களுக்கு பதிலாக நிறைய தண்ணீர் குடியுங்கள்.

உங்கள் மருத்துவரிடம் நீங்கள் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்கள்

1. உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவுகளை எவ்வாறு குறைப்பது என்பதைப் பற்றி உங்கள் மருத்துவர் அல்லது நர்ஸ் உங்களிடம் பேசுவார்.
2. உங்களுடைய நீரிழிவுக் கட்டுப்பாடு உங்களுக்கு சந்தோஷத்தைத் தராதபட்சத்தில்
3. உங்கள் நீரிழிவை சமாளிக்க நீங்கள் போராடும்போது.
4. உங்கள் மருந்தினால் உங்களுக்கு ஏதேனும் பக்க விளைவு ஏற்பட்டிருந்தால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உங்கள் சாப்பிடும் வழக்கத்தை மாற்றவும், மேலும் அதிகமாக உடற்பயிற்சி செய்யவும், ஓர் உணவு முறை நிபுணரைக் காண வேண்டு மென்று பரிந்துரைக்கப்பட்டிருந்தால்.
6. உங்கள் பகுதியில், நீரிழிவு குறித்த குழுக் கல்வி நடப்பதைப் பற்றிய தகவல் கிடைத்தால்.
7. வழக்கமான இரத்தப் பரிசோதனைகள், இரத்த அழுத்தம் மற்றும் பாதப் பரிசோதனைகள்.
8. குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறையாவது உங்கள் கண்களை பரிசோதிப்பதற்காக கண் மருத்துவ நிபுணரிடம் செல்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தால்.

எனக்கு நானே எப்படி உதவிக் கொள்ளலாம்?

1. உங்கள் சந்திப்பு ஏற்பாடுகள் அனைத்திற்கும் செல்லுங்கள்
2. பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி உங்கள் மருந்துகளை எடுத்துக் கொள்ளுங்கள்.
3. தினமும், ஏதேனும் உணர்வு இழப்பு உள்ளதா மற்றும் நிறத்திலோ அல்லது வடிவத்திலோ மாற்றம் உள்ளதா என்று உங்கள் பாதங்களை சோதியுங்கள்.
4. அதிக உடற்பயிற்சி செய்யுங்கள், அதாவது நிறைய நடக்கத் தொடங்கி, நாளடைவில் அதனை மேலும் அதிகமாக்கிக் கொள்ளுங்கள். குறைவாக அமர்ந்திருக்க முயற்சியுங்கள்.
5. உங்கள் சாப்பிடும் வழக்கங்களை மாற்றுங்கள்
6. குளிர்கால ஜுரத்திற்கான தடுப்பூசியை போட்டுக் கொள்ளுங்கள்
7. அதிக உடல் எடை இருந்தால், அதைக் குறைக்க உதவியை நாடுங்கள்
8. நீங்கள் புகைப்பிடிப்பவராக இருந்தால் நிறுத்திவிடுங்கள்.

என் இரத்த குளுக்கோஸ் அளவுகள் அதிகமாக இருப்பதை நான் எப்படி அறிந்து கொள்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவுகள் அதிகமாக இருந்தால், அதைச் சொல்வது கடினமாக இருக்கலாம், அதனால்தான் உங்கள் மருத்துவரிடம் நீங்கள் தொடர்ந்து சோதித்துக் கொள்ள வேண்டும். சில சமயங்களில், உங்களுக்கு பின்வரும் அறிகுறிகளில் சிலவை இருக்கலாம்.

1. குறிப்பாக இரவு நேரங்களில், அதிகமாக சிறுநீர் கழித்தல்
2. வழக்கத்தைவிட அதிகமாக தாகம் எடுத்தல்
3. களைப்பாக உணர்தல்
4. எந்த முயற்சியும் இல்லாமலேயே உடல் எடை குறைதல்
5. வெட்டுக்காயங்கள் மற்றும் புண்கள் ஆறுவதற்கு அதிக நாட்களாதல்.

இந்த அறிகுறிகளில் ஏதேனும் உங்களுக்கு இருந்தால், அல்லது உங்கள் உடல் நலத்தில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக நீங்கள் சந்தேகப்பட்டால், உங்கள் மருத்துவர் அல்லது நர்ஸிடம் பேசுங்கள்.

ஏதேனும் மரபுவழி மருந்து உதவுமா?

மரபுவழி மருந்துகளும், தயாரிப்புகளும் நீரிழிவை சமாளிக்க உதவக்கூடும் என்பதற்கான வலுவான ஆதாரம் ஏதுமில்லை. இத்தயாரிப்புகளில் சில, உங்கள் நீரிழிவு மருந்து வேலை செய்யும் முறையை பாதிக்கலாம், மேலும் சிலவை நீரிழிவு சிக்கல்களை மோசமாக்கிவிடவும்கூடும். எனவே நீங்கள் ஏதாவது மரபுவழி மருந்தை எடுத்துக் கொண்டிருந்தால், அதைப்பற்றி உங்கள் மருத்துவர் அல்லது நர்ஸிடம் நீங்கள் சொல்லிவிடுவது மிகவும் முக்கியமானது. உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் மருந்திற்கு பதிலாக மரபுவழி தயாரிப்புகளை எடுத்துக்கொள்வது பாதுகாப்பானது அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச்சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த தூரிய மெஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் கழிமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தராத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈடுரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முகச் சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதுலைக் களைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரணடுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லாத ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற கணுவாய் அப்பாலுக கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் றிருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யேற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்றிசை யணுகினன் னிருள்போய்
யகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழ வெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரணிரை யறுபதம் முரல்வன விவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரு மானந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக வியம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரியாய் யெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையரி யாழின ஒருபாற்
விருக்கொடு தோத்திர மியம்பின ரொருபாற்
நுன்னிய பிணைமலர்க் கையின ரொருபாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபாற்.
சென்னியி லஞ்சலி கூப்பின் ரொருபாற்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் டோறுநின் றாயெனின் னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத் வல்லாற்
கேட்டறியோம் உனைக் கண்ட றிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக்கு கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரு
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்ணங் கிண்மண வாளா
செப்புறு கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருபெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென வமுதென வறிதற்
கரிதென வெளிதென வமரரு மறியா
ரிதுவவன் திருவுரு விவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளு
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
வெதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதனடு விறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடி தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
யந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தவரு நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கண்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியா
ரெண்ணகத் தாயுல குக்குயிரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையினாணாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலா
மவன்விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையு நீயு
மவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்தி மாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறைஆ கமலங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். 1

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கம்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன்அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம். 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும்அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைக்கின்றோம். 3

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைக்கின்றோம். 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன்எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைக்கின்றோம். 6

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறியும் பசு அறியும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும் எமைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும்
சகல கருமம் சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும் எண்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ் ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருப்த் தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர்மறைந்தார்.

பாரயண பலன்:

(இவ்வெட்டுப் பாடல்களும் "தோத்திராட்டம்" என வழங்கப்பெறும். இவற்றை மூன்று நாட்கள் முப்பொழுதும் ஓதினோர் எல்லாப் பேறுகளையும் பெறுவர். எட்டு நாட்கள் ஓதினோரும். சதுர்த்தியன்று எட்டுமுறை ஓதினோரும் அட்டமாசித்திகளை அடைவர். நாள்தோறும் பத்துமுறையாக இரண்டு மாதம் ஓதினோர்க்கு அரசர் வசியமாவர். அவ்வாறு இருபத்தொரு முறை ஓதினோர் மக்கட்பேறு, கல்வி, செல்வம், முதலிய எல்லா நலன்களையும் அடைவர். என்று விநாயகப் பெருமான் காசிபர் முதலியோர்க்கு அருளினமை, விநாயக புராணத்துள் கூறப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பித்ரு தோசம் என்றால் என்ன?**

நமது குடும்பத்தில் எம்மோடு வாழ்ந்து மறைந்த முன்னோர்களை பித்ருக்கள் என்கிறோம். அவர்களுடை ஆத்மா சாந்தி அடையாததால் வருகின்ற தோஷம் பித்ரு தோசம் எனப்படும்.

**பித்ரு தோஷத்தினால் ஏற்படும் தீய விளைவுகள் என்ன?**

பித்ரு தோசம் உள்ளவர்களுக்கு திருமணம் நடைபெறாது அல்லது மிகத்தாமதமாக நடக்கும். விவாகரத்து ஏற்படலாம் அல்லது தம்பதியினரிடையே அன்னியோன்னியம் இருக்காது அல்லது குழந்தைப் பாக்கியம் இருக்காது அல்லது குழந்தை பாக்கியம் தாமதப்படும். ஒரு சிலருக்கு கடுமையான உடல் உபாதைகள் ஏற்படும். மனநோய் கரணமாக தாடிபத்திய வாழ்க்கை பாதிக்கும். ஒரு சிலருக்கு பலமுறை திருமணம் நடக்கவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும் தம்பதியருக்கிடையே ஒருவருக்கொருவர் உண்மையானவர்களாக நடந்து கொள்வதில்லை.

**பித்ரு தோசம் வருவதற்கான காரணங்கள் எவை?**

01. தனது பெற்றோர்களை இறுதி நாட்களில் அவர்களை சரிவர கவனிக்காமல் இருந்து அவர்கள் மனவேதனை அடைந்தால் பித்ரு தோசம் ஏற்படும்.

02. பெற்றோர் கருச்சிதைவு செய்து கொண்டால், தந்தைக்கு எத்தனை தாரம் அவர்கள் அனைவருக்கும் திதி கொடுக்காவிட்டால், ஆண் வாரிசு இல்லாத சித்தப்பா, பெரியப்பா, மாமி சகோதர்கள் ஆகியோரிக்கு திதி கொடுக்காவிட்டால், துர்மரணம் அடைந்தவர்களுக்கு திதி கொடுக்காவிட்டால் பித்ரு தோசம் ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. நாம் நம்முற்பிறவிகளில் செய்த பாவங்களினாலும் நம் முன்னோர்கள் செய்த பாவங்களினாலும் ஏற்படுகின்றது.

04. ஒரு ஆண் தன் முற்பிறவியில் தனது மனைவியினை கவனிக்காமல் வேறு பெண் மீது கொண்ட மோகத்தினால் அலைந்து திரிந்தால் இப்பிறவியில் தனது மனைவியினால் பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது.

05. ஒரு பெண் தன் முற்பிறவியில் தனது கணவனை கவனிக்காமல் வேறு ஆணின் மீது மோகம் கொண்டு அலைந்தால் இப்பிறவியில் தனது கணவனினால் பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது.

06. ஒருவர் தன் முற்பிறவியில் தனது சகோதர., சகோதரிகளுக்கு துன்பம் இழைத்திருந்தால் இந்த பிறவியில் தனது சகோதர / சகோதரிகளால் பிரச்சனையினை சந்திக்க நேரிடுகிறது.

07. ஒருவர் தன் முற்பிறவியில் முறையற்ற விதத்தில் கருச்சிதைவு செய்திருந்தால் இப்பிறவியில் மகப்பேறு இல்லாமல் சந்ததி விருத்தியடையாமல் போகும் நிலையும் அமைகின்றது.

**பித்ருக்களின் வகைகள் எவை?**

பித்ருக்கள் இரண்டு வழியில் வருகின்றார்கள் தாய் வழியில் இறந்தவர்கள் அனைவரும் மாதுர் வழி பித்ருக்கள் எனவும் தந்தை வழியில் இறந்தவர்கள் அனைவரும் பிதுர் வழி பித்ருக்கள் என அழைக்கப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பித்ருக்ககளை ஏன் வழிட வேண்டும்?**

நம்முடைய இந்த உடல், உயிர் மற்றும் பொருட்கள் இவற்றை நாம் அனுபவித்து வருகின்றோம் அவ்வாறு நாம் அனுபவிக்கும்போது நமது பித்ருக்கள் செய்த பாவம் மற்றும் புண்ணிய பலனையும் சேர்த்தே அனுபவித்து வருகின்றோம் நம்முடன் வாழ்ந்து மறைந்த தமது பித்ருக்கள் எப்போதும் நமது நலனையே விரும்புபவர்கள் நமது பித்ருக்கள் நம்முடன் வாழும்போது அவர்களை பேணிகாத்து பசியினைப்போக்கவேண்டும் இதுவே பிதுர்கடன் எனப்படும்.

**பித்ருதோசத்தை ஜாதகங்களில் கண்டறிவது எப்படி?**

ஒருவர் ஜாதகத்தில் சூரியன் அல்லது சந்திரன் இவ் இரண்டு கிரகத்துடன் ராகு அல்லது கேது ஆகிய கிரகம் சேர்ந்து எந்த இடத்தில் இருந்தாலும் பித்ரு தோசமாகும்.

உங்கள் பிறந்த ஜாதகத்தில் லக்கினத்திற்கு1.5.7.9 முதலான இடங்களில் இராகு அல்லது கேது இருந்தால் நீங்கள் பிதுர்தோசத்துடன் பிறந்துள்ளதாக அர்த்தம்.

**பித்ருதண்டனை வழங்கும் சந்தர்ப்பம் என்ன?**

நமது முன்னோர்கள் நம்மீது அளவுக்கதிகமான பாசம் வைத்திருப்பவர்களாக இருந்தாலும் கூட, நாம் அவர்களை சரிவர பார்த்துக் கொள்வதிலிருந்து தவறியிருந்தாலோ அவர்களின் காலத்துக்கு பிறகு நமது சோம்பலினாலோ, அலட்சியத்தினாலோ, நம்பிக்கையின்மையினாலோ சரியாக பித்ரு காரியங்களைச் செய்யாமல் இருந்தால் அதாவது நாம் செய்யவேண்டிய தர்மத்திலிருந்து வலுவிழந்தால் அந்த தர்மமானது நம்மைத் தண்டித்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்தம் சம்பந்மான விதிகள்

01. பித்ருக்களுக்கு சிராத்தம் செய்யவேண்டிய மாதத்தில் அந்த நாளுக்கு முன்னதாக எந்த ஒரு விசேஷமாக பூசைகளையும் செய்தல் கூடாது.

02. சிராத்தம் செய்ய வேண்டிய மாதத்தில் அந்த நாளுக்கு முன்னதாக எந்தவொரு மங்கள நிகழ்வுகளையும் செய்யக்கூடாது.

03. சிராத்தம் செய்கின்ற நபர் தனது முன்னோருக்கு சிராத்தம் செய்து முடிக்காமல் பூஜைகள், ஹோமங்கள், ஆலய பூஜைகளில் தனது பெயர் சொல்லி சங்கர்ப்பம் செய்யக் கூடாது.

04. சூரியனும் சந்திரனும் இணைந்திருக்கும் நாள் அமாவாசையன்று பித்ருக்ககளுக்கு பசியும், தாகமும் அதிகமாக ஏற்படுகின்றது. அதனால் எள் கலந்த நீரைநமது வீட்டுக்கு முன்னால் வந்து எதிரிபார்த்துக் கொண்டு கொடுப்பார்கள். அதை கொடுக்கவில்லை என்றால் மிகுந்த கோபத்துடன் பித்ருக்கள் சாபம் கூட தந்துவிட்டு செல்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

05. மறைந்த முன்னோர்களுக்கு நாம் செய்யும் சிராத்தங்கள் நமது குடும்பத்தாரின் நன்மைக்காகவே செய்யப்படுகின்றது ஆகவே தவறாமல் சிரத்தத்தையும், தர்ப்பணங்களையும் செய்தல் வேண்டும்.

06. ஒருவன் தனது தாய் தந்தைக்கு சிராத்தம் செய்யாமல் எனக்கு செய்யும் பூஜைகளை நான் ஏற்றுக்கொள்வதில்லை என விஷ்ணுவும் சிவனும் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. இறந்தவர்களுக்கு வருஷம் ஒரு முறையாவது சிராத்தம் செய்தல் வேண்டும் ஏனென்றால் தனது குழந்தைகள், பேரப்பிள்ளைகள் வாழும் இடத்திற்கு இறந்த ஜீவன் காற்றுவடிவில் வந்து அவர்கள் கொடுக்கின்ற உணவு, ஹோமம், பிண்டம், தானம் போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்காக காத்துக் கொண்டிருக்கும்

08. பித்ருக்களுக்கு சிராத்தம் செய்ய வேண்டி திதியில் இறையான ஹோமம், சாப்பாடு போட்டு வந்தால் பித்ருக்கள் திருப்தியடைந்து நமக்கு குடும்பத்துடன் நீண்ட ஆயுள், அழியாப்புகழ், உடல் வலிமை செல்வம், பசுக்கள், சுகம், தானியங்கள்போன்றவற்றைத்தருவார்கள்.

09. தமது பித்ருக்களின் சிராத்தத்தை சிரத்தையுடன் செய்தால் நிட்சயம் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

10. நம்மை விட்டுப் பிரிந்த நம் பித்ருக்கள் அனைவரும் சக்தி நிறைந்தவர்கள் அவர்கள் ஆசீர்வாதத்தினால் கோடி கோடியாக புண்ணியமும் செல்வமும் நமக்கு கிடைக்கும்.

11. இறைவன் ரூபமான தேவதைகளை விட பித்ருக்கள் வழிபாட்டை பிரதானமாக நடாத்த வேண்டும்.

12. சிராத்தம் தர்ப்பணம் செய்யாதவன் மறுபிறவியில் இழிவானவனாகப் பிறவி எடுப்பான் என புராணங்கள் கூறுகின்றது.


13. மக்களுக்கு தொண்டாற்றி சுயநலமின்றி அரிய இறைப்பணிகளைப் புரிந்தோர் மட்டுமே பித்ருலோகம் அடைகின்றனர் என்பதை கருட புராணம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. தாய் தந்தைகளின் இறந்த திதிகளை மட்டும் நினைவு கொண்டு தர்ப்பண காரியங்கள் செய்தால் போதும் எனும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. குடும்பத்தில் இறந்த முன்னோர்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து மாளயபட்ச சிராத்தங்கள் செய்வது முழுப்பலனையும் தரவல்லது.

15. கோயில்கள், குளங்கள், கடல்கள், ஆறுகள் போன்ற இடங்களில் தர்பணம் செய்வது அதிக சக்தியை தரும்.



**- சிவத் சண்முக மயூரவதன் குருக்கள்**
மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்,
களுவாஞ்சிக்குடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாளையபட்சம்

*"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடைமக்கட் பெறின"*

மனிதப் பிறப்பு ஆன்மாவின் விடுதலை வேண்டி தமது பிதுர்களுக்கு பிள்ளைகள் / உறவுகள் மூலம் பிறருக்கு செய்யும் நற்கருமங்கள் மூலமே பூரணமடையும்.

காலைப்பசியை தீர்த்தவரும்
கன்னியாதானம் செய்தவரும்
தாளங்கிணறு போட்டவரும்

வருடந்தோறும் தெட்சனையனம் புரட்டாதி மாத தேய்பிறை (அமரபட்ச) பிரதமை முதல் 15 நாள் (பட்சம நாள்) அமாவாசை வரை இந்த விரதம் இருப்பது சிறப்பாகும்.

பித்துருலோகத்தில் இருந்து நம் முனன்னோர்களின் சுத்த ஆத்மா பூமிக்கு வரும் இந்த விசேட நாளில் அவர்களுக்கு விருப்பமான உணவுகளை படையல் செய்வதால் பிதுர்களுக்கு நன்றி செலுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பமாகும்.

பொதுவாக ஒருவர் இறந்தால் அவருக்கு செய்யப்படும் ஆத்மவிமோசனங்களாவன

மாத / அமாவாசை / வருட திதி / ஆடி அமாவாசை / மார்கழி மாதம் என்பவற்றுக்கு மேலாக புரட்டாதி மாத மஹாளையமே சிறப்பாகும் என்பது ஞானிகள் வாக்காகும்.

ஒருவர் இறந்த திதி தவறுதலாக விடப்பட்டாலோ அல்லது திதி தெரியாமல் போனாலோ இந்த மஹாளையபட்ச காலத்தில் குறிப்பிட்ட நாட்களுக்குள் செய்வது புண்ணியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 நாளிலும் ஒவ்வொரு திதியிலும் விசேடபலன் உள்ளது இயந்திரம் / விபத்து / அகால மரணம் அடைந்தவருக்கு சதுர்த்ததி திதியில் செய்வது நல்லது இதேபோல பிதுர்கள் (பெற்றோருக்கு) பரணி அட்டமி மற்றும் மகம் நட் உத்திரமும் திரயோதசி திதியும் உள்ள கமகு கஜச்சாளய எனும் நாளில் சிறப்பு ஆகும்.

பொதுவாக முதல் நாள் சுத்தமாக இருந்து புரட்டாதி மாத அமாவாசையில் விரதம் (வீட்டில் / புண்ணிய தீர்த்ததலத்தில்) எள்ளும் நீரும் இறைத்து பிறருக்கும் பசு, காகம் என்பவற்றுக்கு உணவு கொடுத்து பிராமணர் குருவுக்கு தானம் தட்சணை கொடுத்து பிதுர்களின் ஆசியை பெறுவது 7 தலைமுறைக்கு புண்ணியம் ஆகும். மேலும் இந்த காலங்களில் சிவன் நாமத்தை சகல ஜீவன்களும் சுகமாக இருக்க இறை ஆசி கிடைக்கட்டும்.



**- பிரம்ம ஸ்ரீ இராம. மங்களேஸ்வரசர்மா**
46/6, கல்லடி வேலூர்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகன் கதிர்வேலினால் வரையப்பட்ட
அம்மாவின் படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மலர்வு | | இறைவன் அடி |
|---|---|---|
| 23 |  | 11 |
| - | | - |
| 06 | | 11 |
| - | | - |
| 1938 | | 2021 |

## அமரர் . திருமதி கணபதிப்பிள்ளை கனகம்மா

மூதூர் பாலத்தடிச்சேனையை பிறப்பிடமாகவும் திருக்கோணமலை உவர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கணபதிப்பிள்ளை கனகம்மா அவர்கள் 11.11.2021 வியாழக்கிழமை அன்று இறையடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும், அமரர்களான அழகுதுரை லெட்சணப்பிள்ளை அவர்களின் பாசமிகு மூத்த மகளும் அமரர்களான சின்னத்தம்பி ஞானம்மா அவர்களின் அன்பு மருமகளுமாவார். மாதவராஜா, சோதிராஜா, சண்முகராணி, குகானந்தராஜா, கலாராணி, அருள்ராஜா, அன்புராஜா, கோமதி, பத்மராணி, நவராஜா, இந்துமதி, நீதிராஜா, கதிர்வேல் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மனோராணி, சரோஜாதேவி, ஞானேஸ்வரன், மாலா, நாகேந்திரன், சுதர்ஷினி, சுகுமாரி, திருச்செல்வம், வினோதினி, சில்வஸ்டார் லிங்கேஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சின்னப்பிள்ளை,அமரர் அமராவதி, இராசபாக்கியம், சச்சிதானந்தம், நவமணிதேவி, திலகராணி, யோகராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்

**அன்னாரின் இறுதிச்சடங்குகள் வெள்ளிக்கிழமை 12.11.2021 மாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று திருக்கோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.**

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்: குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கணபதிப்பிள்ளை கனகம்மா அவர்களின் மறைவு குறித்த

## இரங்கற்பா

| மண்ணில் | | இறைவன் அடி |
|---|---|---|
| 23 - 06 - 1938 |  | 11 - 11 - 2021 |

ஏழாலை பாலத்தார் சேனையிலே அவதரித்தாய்
யாருக்கும் வெள்ளை மனதுடன் [illegible] வாழ்ந்திருந்தாய்
[illegible] காலும் வரை காத்திருந்தாய்
[illegible] வழங்கியிருந்தாய்

எண்ணில் இரண்டு [illegible] உந்தன் மக்கள்
[illegible] ஆண்மகனை அன்று
மண்ணகத்தில் பெருமையுற்று [illegible]
மகராசி எனும் விருதாய் நீயிருந்தாய் அம்மா

பொறுமை காரியத்தில் பூமியையும் வென்றிருந்தாய்
பொறுமை பற்றாக [illegible] மனம் படைத்தாய்
வறுமையிலும் செம்மையுடன் வையகத்தில் [illegible]
[illegible] மகராசி நீ சோகத்தை பரிசளித்தாய்

நீ [illegible] சிறப்பாக வாழ்ந்திருந்தாய்
சிறியவர்களை உன் பேரர்களாய் நினைத்திருந்தாய்
பாலத்தார் சேனையின் தனித்துவத்தை பேணி நின்றாய்
கணபதிப்பிள்ளை ஆசானுக்கு ஆன துணையாய் நீயிருந்தாய்

அல்லல் பட்ட வேளையிலே அனைவருக்கும் கரம் கொடுத்தாய்
அன்பும் [illegible] துன்பத்தை துடைத்தெறிந்தாய்
ஏழாலை மண்ணின் தனித்துவத்தை பெற்றிருந்தாய்
[illegible] ஆறுதலை நீ கொடுத்தாய்

எவ்வேளை [illegible]
எவர் மனமும் நோகாமல் ஏற்றபடி செயல் புரிந்தாய்
பெற்றெடுத்த மக்கள் புகழ் [illegible] நீ மகிழ்ந்தாய்
அன்பு எனும் பாதையினை [illegible] பேணி நின்றாய்

[illegible] நீ [illegible] வைத்திருந்தாய்
[illegible] மனதில் நிறைந்திருந்தாய்
எத்தனை [illegible] வரை நீ வாழ நினைத்திருந்தாய்
[illegible] வாழ்வை ஏன் முடித்தாய்


அவர்கள் [illegible] தருணத்தில் தாயே
[illegible] உனக்காய் திறந்திருக்கும்
இறை சித்தம் வேண்டியே பிரார்த்திக்கின்றோம்
உம் பிரிவுத் துயரை தாங்கா உறவுகளை ஆறுதல் செய்கின்றோம் தாயே
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

துயரில் பங்கேற்கும் [illegible] குடும்பம்
ஓய்வுநிலை ஆசிரியர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச வரல




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி
கொன்ற மகற்கு"

எங்கள் குடும்பத்திற்கோர் அகல்விளக்காய் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவடி சரணடைந்த எங்கள் அன்பான அம்மா

**அமரர். திருமதி. கனகம்மா கணபதிப்பிள்ளை**

அவர்களின் மரணச் செய்திகேட்டு விரைந்து வந்து ஆறுதல் கூறிய அனைத்து கடமைகளையும் மேற்கொண்டவர்களுக்கும், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசிமூலம், மின்னஞ்சல், குறுஞ்செய்தி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோர், மற்றும் மலர் அஞ்சலி செலுத்தியோர், கண்ணீர் அஞ்சலி பதாதை வெளியிட்டோர், இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்டு ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்தோருக்கும், இத்துயர காலங்களில் உணவளித்து உபசரித்தவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் தோளோடு தோள் நின்று உதவிய உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், அன்பு உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*இங்ஙனம்*
**குடும்பத்தினர்**

*உவர் மலை, திருகோணமலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்பு

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோ அது நன்றாக நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையதை எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவருடையதாகும்.

மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

**இதுவே உலக நியதியும்**

**எனது படைப்பின்**

**சாராம்சமுமாகும்.**

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டரி அச்சகம், கல்முனை. 0771597347